தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-2-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வெண்டை விலை சீராக இருக்கும்

வெப்ப மண்டல நாடுகளில் வெண்டை மிக முக்கியமான காய்கறிப் பயிர்களில் ஒன்றாகும். 2010-11 ஆம் ஆண்டில் உலக அளவில் வெண்டை 11.48 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு 7.9 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது.

வெண்டை பெருவாரியாக நைஜீரியா, சூடான், பாகிஸ்தான், கானா, எகிப்து, ஐக்கிய அரபு நாடுகள், மெக்சிகோ மற்றும் கேமரூன் ஆகிய நாடுகளில் பயிரிடப்படுகிறது. இந்திய உற்பத்தியில் ஆந்திரப்பிரதேசம் 11.84 இலட்சம் டன்களை உற்பத்தி செய்து முன்னிலை வகிக்கிறது. அதனைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் 8.6 டன்களும் பீகார் 7.88 இலட்சம் டன்களையும் உற்பத்தி செய்கிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் தமிழகத்தில் வெண்டை உற்பத்தி (1.35 சதவீதம்) மிகவும் குறைவாகும்.

தமிழகத்தில் வெண்டை முக்கியமாக ஆடிப்பட்டத்திலும் (ஜுன் - ஆகஸ்ட்) மற்றும் தைப்பட்டத்திலும் (பிப்ரவரி) பயிரிடப்படுகிறது. இப்பயிரானது சேலம் மாவட்டத்திலுள்ள தலைவாசல் மற்றும் மகுடன் சாவடி ஒன்றியத்திலும் மேலும் தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி ஒன்றியத்திலும் கோவை மாவட்டத்தில் காரமடை, பெரியநாயக்கன்பாளையம் மற்றும் தொண்டாமுத்தூர் ஒன்றியங்களிலும் மற்றும் திருச்சி மாவட்டத்தில் வையம்பட்டி ஒன்றியத்திலும் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது.

குளிர்காலத்தில் வெண்டை சாம்பல் நோயால் தாக்கப்படுகிறது. ஆகவே சந்தைக்கு வரும் பயிரின் வரத்து மிகக் குறைவாக இருக்கும். ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களிலும் மார்ச் முதல் வாரம் வரையிலும் இச்சூழலே நிலவும்.

எதிர்வரும் காலத்தில் வெண்டையின் விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் மொத்த சந்தைகளில் நிலவிய வெண்டை விலை விவரங்களை ஆராய்ந்தது.

கோயம்புத்தூர் சந்தையில் முக்கிய வெண்டை பயிரிடும் பகுதிகளான தொண்டாமுத்தூர், ஆலாந்துறை மற்றும் காரமடைப் பகுதிகளில் மிகக் குறைந்த வரத்தே உள்ளது. விவசாயிகளுக்கு தற்போது கிலோவிற்கு ரூ.26 வரை கிடைக்கிறது. ஆகவே வர்த்தகர்கள் சேலம் மற்றும் தலைவாசல் சந்தையில் கொள்முதல் செய்கின்றனர்.

ஒட்டன்சத்திரம் சந்தையில் மிகுந்த பனிப்பொழிவு காரணமாக குறைந்த வரத்தே உள்ளதால் வர்த்தகர்கள் தலைவாசல் சந்தையில் கொள்முதல் செய்கின்றனர். தற்போது ஒட்டன்சத்திரம் சந்தையில் கிலோ ரூ.25க்கு விற்பனையாகிறது. தலைவாசல் சந்தையிலும் முக்கிய வரத்து மாவட்டங்களான ஆத்தூர், கடலூர் மற்றும் பண்ருட்டி பகுதிகளிலிருந்து குறைந்த வரத்தே உள்ளது. தற்போதைய பண்ணை விலை ரூ.24 ஆகும்.

கடந்த வருடங்களில் நிலவிய விலையை வர்த்தகர்களிடம் ஆய்வு நடத்தியதில் தற்போதைய விலையே வரும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும். பிப்ரவரி மாத இறுதியில் விலை சற்றே அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேலும் மார்ச், 2014 முதல் விலை குறைய வாய்ப்புக்கள் உள்ளன.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003.
தொலைபேசி: 0422-6611374 / 6611283

மக்கள் தொடர்பு அலுவலர்